**தலைப்பு 432 - கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 17 இல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஒக்தோபர் 26 இல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் இராஜாங்க அமைச்சு அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி இராஜாங்க அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) இந்த அறிக்கையில் 3.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த அவதானிப்பு தொடர்பாக முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 10 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 48,579,000 மொத்த தொகையில் ரூபா 17,362,760 கூட்டுமொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் அதன் சதவீத வீச்செல்லை 21 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரை காணப்பட்டது. | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | வழங்கப்பட்டுள்ளவாறு நிதியேற்பாடுகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில், 07 மூலதனச் செலவின விடயங்களுக்கான ரூபா 891,200,000 மொத்த ஒதுக்கீட்டில், ரூபா 328,687,085 கூட்டுமொத்தமான ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் அதன் சதவீத வீச்செல்லை 29 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரை காணப்பட்டது. | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | மூலதனச் செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் ரூபா 275,000,000 குறைநிரப்பு ஒதுக்கீடுகளில் ரூபா 177,357,357 தொகை அல்லது 84 சதவீதத்திற்கும் 40 சதவீதத்திற்கும் இடைப்பட்ட தொகை எஞ்சியிருந்தது, இது சிறு தோட்ட பயிர்களை அபிவிருத்தி செய்வதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஏற்றுமதி விவசாய கிராமங்களுக்கான நீர்ப்பாசனம் எனும் பெயர்களிலான 02 அபிவிருத்தி உப செயற்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க திட்டமிட்டவாறு ஓராண்டுக்குள் அது தொடர்பான பணிகளை பூர்த்தி செய்ய முடியவில்லை. | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்குரிய 02 அபிவிருத்தி உப செயற்திட்டங்களுக்காக ரூபா 275 மில்லியன் குறைநிரப்பு நிதியேற்பாடு காணப்பட்ட போதிலும் அது தொடர்பான பௌதீக செயற்பாடுகளுக்கு பணம் செலுத்த போதியளவு நிதி இல்லாததால், கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு போதுமான நிதி முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடியவில்லை. | குறைநிரப்பு பாதீட்டு விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துவதற்காக ஆண்டின் தொடக்கத்தில் இருந்தே செயல்நடவடிக்கைத் திட்டம் பின்பற்றப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிகள் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றமடையாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறு தோட்டப் பயிர்களை அபிவிருத்தி செய்வதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஞ்சள் மற்றும் இஞ்சி பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கு வருடாந்த பாதீட்டில் இருந்து ரூபா 50,000,000 தொகையும் குறைநிரப்பு பாதீட்டில் இருந்து ரூபா 125,000,000 தொகையும் என ரூபா 175,000,000 கூட்டுமொத்த தொகை 2021 பெப்ரவரி 29 இல் இராஜாங்க அமைச்சால் பெறப்பட்டது. இத்தொகையிலிருந்து ரூபா 168,000,000 ஒதுக்கீடு 11,500,000 மஞ்சள் தொட்டிச் செடிகளை விநியோகிப்பதற்கும் 30 ஹெக்டெயர் மஞ்சள் விதை தோட்டங்களை வளர்ப்பதற்கும் 1,000,000 இஞ்சி செடிகளை விநியோகிப்பதற்கும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் 4,847,763 | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மஞ்சள் மற்றும் இஞ்சி நாற்று விநியோகத்தில் பிரதேச அபிவிருத்திக் குழுக்கள், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஈடுபட்டுள்ளதாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. மக்கள் பிரதிநிதிகளின் ஒருங்கிணைப்பில் செடிகளை விநியோகம் செய்வதில் தாமதம் ஏற்பட்டதால், செடிகள் விநியோகம் மந்தகதியில் இடம்பெற்றது. ஆகையால் விளைந்த செடிகளில் ஒரு பகுதி அதிகளவில் வளர்ந்ததால் அழிக்கப்பட்டு மீதமுள்ள செடிகள் நாற்றுமேடை உரிமையாளர்களால் விற்பனை செய்யப்பட்டன. மஞ்சள் | நடைமுறை அமுல்ப்படுத்தலை மனதில் கொண்டு செயற்திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மஞ்சள் தொட்டி செடிகளும் 114,574 இஞ்சி செடிகளும் மாத்திரமே விநியோகிக்கப்பட்டதுடன், 04 மஞ்சள் விதை தோட்டங்களில் 8.9 ஹெக்டெயர் (22 ஏக்கர்கள்) மஞ்சள் செடிகள் பயிரிடப்பட்டு ரூபா 74,395,155 மாத்திரமே செலவிடப்பட்டது. | செடிகளின் விநியோகம் 4,847,763 செடிகளுக்கும், இஞ்சி செடிகளின் விநியோகம் 114,574 செடிகளுக்கும் மட்டுப்படுத்தப்பட வேண்டியிருந்தது. | |
| (ஆ) | 100 ஏற்றுமதி விவசாய கிராம மஞ்சள் நாற்று மேடைகளில் தெளிப்பு நீர் பாசனத்திற்காக ரூபா 150,000,000 தொகை குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் 2021 மார்ச் 29 இல் இராஜாங்க அமைச்சால் பெறப்பட்டது. இக் குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாட்டில் இருந்து ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு ரூபா 30,000,000 ஒதுக்கப்பட்டதுடன் மாத்தளை மாவட்டத்தில் உள்ள 03 நாற்று மேடைகளுக்கும் திணைக்களத்திற்கு சொந்தமான நாற்று மேடைகளுக்கும் தெளிப்பு நீர்ப்பாசனத்திற்காக ரூபா 10,773,487 தொகையை திணைக்களம் செலவிட்டிருந்ததுடன்இலங்கை தரைப்படையின் கட்டுநாயக்க மற்றும் நிரவிய ஆகிய 02 பண்ணைகளுக்கு நீர் விநியோகத்திற்காக ரூபா 12,474,000 தொகையை அமைச்சு செலவிட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 150,000,000 தொகை 100 மஞ்சள் நாற்று மேடைகளுக்கு நீர்ப்பாசன நீரை வழங்குவதற்காக இலக்கு நிர்ணயிக்கப்பட்டது, ஆனால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 126,752,512 தொகையை அல்லது 84 சதவீதத்தை பயன்படுத்த முடியவில்லை. | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. கொவிட்-19 இன் தொற்றுநோய் நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் கடைப்பிடித்த வழிமுறைகளுடன், அரசாங்க அதிகாரிகள் தங்கள் அலுவலகங்களுக்கு அழைக்கப்பட்டு, கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டமை, போக்குவரத்து நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டமை மற்றும் கேள்விதாரர் விலைகளை சமர்ப்பிக்காதமை போன்றவையும் நிதிகள் பயன்படுத்தப்படாதமைக்கு தாக்கமளித்திரந்தன என்பதை நான் மேலும் தெரிவித்துக் கொள்கிறேன். | நடைமுறை அமுல்ப்படுத்தலை மனதில் கொண்டு செயற்திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஏற்றுமதி விவசாயத் துறையில் செயன்முறைப்படுத்தல் மற்றும் பெறுமதி சேர்க்கை - காலி எல்பிட்டிய விவசாய ஏற்றுமதி உற்பத்தி மற்றும் செயன்முறைப்படுத்தல் வலயத்தை ஸ்தாபிப்பதற்காக பாதீட்டு மதிப்பீட்டில் இருந்து ரூபா 65,000,000 தொகையும் குறைநிரப்பு மதிப்பீட்டில் இருந்து ரூபா 200,000,000 தொகையும் என ரூபா 265,000,000 கூட்டுமொத்த தொகையை இராஜாங்க அமைச்சு 2021 மார்ச் 23 இல் பெற்றிருந்தது. இந்த வலயத்திற்கு 14 விவசாய தொழில்முனைவோர் தெரிவுசெய்யப்பட்டு 64 ஏக்கர் காணித் துண்டுகளை வழங்குவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த தொழில்முனைவோருடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருக்காததுடன் அந்த தொழில்முனைவோருக்கு காணித்துண்டுகளை வழங்குவது தொடங்கப்பட்டிருக்கவில்லை. முதலீட்டாளர்களின் நிர்மாண நடவடிக்கைகளுக்கு வசதியாக உள்ளக வீதி முறைமை, மின்சாரம், நீர் வசதிகள் மற்றும் தொலைபேசி வசதிகளை வழங்குவதற்காக ரூபா 262,578,115 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், இந்த வீதியின் நிர்மாணப் பணிகள் 2022 மே 10 இல் நிறைவடையவிருந்தன. எனினும் அப் பணிகள் 2022 செப்தெம்பர் 08 வரை பூர்த்தி செய்யப்படவில்லை. மேலும், அங்கீகரிக்கப்பட்ட 14 விவசாய தொழில்முனைவோர் 2022 செப்தெம்பர் 30 அளவில் 06 ஆகக் குறைக்கப்பட்டுள்ளனர். | கருத்துரை ஏற்றுக்கொள்ளப்படுகிறது எல்பிட்டிய மஹஹிந்தென்ன பிரதேசத்தில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான 64 ஏக்கர் காணி அளவீடு செய்யப்பட்டு 14 முதலீட்டாளர்களுக்கு எல்லைகள் குறிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிராந்தியத்தில் முதலீடு செய்வதற்கு முதலீட்டாளர்களின் விருப்பம் மற்றும் எதிர்கால வேலைத் திட்டம் குறித்து எழுத்து மூலம் அமைச்சு கேட்டுள்ளதுடன், தற்போது 07 முதலீட்டாளர்கள் இதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளனர். நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் விநியோக நெருக்கடி மற்றும் மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமம் காரணமாக உள்ளக வீதியின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரர் இணங்கியிருந்தார். | நடைமுறை அமுல்ப்படுத்தலை மனதில் கொண்டு செயற்திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும். |

## 3.2 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபை, உள்ளூராட்சி மற்றும் விளையாட்டு அமைச்சிடமிருந்து 2018 யூன் 13 இல் பெறப்பட்ட KC 5500 கார் 2018 ஆகஸ்ட் 24 இல் விபத்திற்குள்ளானது. இந்த வாகனம் அமைச்சிடம் கையளிக்கப்பட்டிருக்காததுடன் விபத்து காரணமாக ரூபா 6,783,254 நட்டம் ஏற்பட்ட போதிலும் அது பொறுப்பான தரப்பினரிடமிருந்து இன்னும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த கார் காலாவதியான காப்புறுதி அனுமதிப்பத்திரத்துடன் செலுத்தப்பட்டதால், விபத்தினால் ஏற்படும் இழப்பை காப்புறுதி கம்பனியிடம் இருந்து ஈடுசெய்ய முடியவில்லை. | விபத்தின் போது காப்புறுதி இரத்து செய்யப்பட்டதால், காப்புறுதி இழப்பீடு பெற முடியாதுள்ளதால், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் இழப்பீட்டை பெற்றுத்தர அக்கறை காட்டுவார். | நட்டத்தை பொறுப்புவாய்ந்த அதிகாரிகளிடம் இருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மிளகு பயிர்ச்செய்கையின் செயற்திறனை அதிகரிப்பதற்காக இராஜாங்க அமைச்சு மீளாய்வாண்டில் ரூபா 532,000 பெறுமதியான 14 துப்பரவாக்கல் இயந்திரங்களை (sweepers) கொள்வனவு செய்திருந்தது. உபகரணங்களை விநியோகிப்பதற்கு பயிற்சி செயலமர்வொன்று திட்டமிடப்பட்ட போதிலும் விநியோகம் 2022 செப்தெம்பர் 30 வரை தாமதமாகியது. | எரிபொருள் நெருக்கடி காரணமாக பயிற்சியை நடாத்த முடியவில்லை. | கொள்வனவு செய்த உபகரணங்கள் தாமதமின்றி வழங்கப்பட வேண்டும். |